செய்தி வெளியீடு எண். 62-2017 நாள்: 30.05.2017

01.06.2017 முதல் 20.06.2017 வரை 1426-ஆம் பசலி ஆண்டிற்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெற உள்ளதால் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறாது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

விழுப்புரம் மாவட்டத்தில் 1426-ஆம் பசலி ஆண்டிற்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) 01.06.2017 முதல் 20.06.2017 வரை நடைபெற உள்ளதால் சம்மந்தப்பட்ட வட்டங்களில் பொது மக்கள் குறைகள் குறித்த மனுக்களை வருவாய் தீர்வாய அலுவலர் அவர்களால் பெறப்பட உள்ளதால் பொதுமக்கள் தங்கள் குறைகள் குறித்த மனுக்களை சம்மந்தப்பட்ட வட்டங்களில் நடைபெறும் வருவாய் தீர்வாய அலுவலர்களிடம் கொடுத்து பயனடையுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் தொடர்பான அனைத்து கூட்டங்களும் மேற்படி தேதிகளில் நடைபெறாது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.